# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,856 — 1931 ம் ஆடு வைகாசிமீ 29 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

### காணி விற்பனவுகள்.

**Jaffna No. 33.**—1931 ம் ஆண்டு ஆடிமீ 22 ந் திகதி புதன்கிழமை 10 மணியளவில் பரித்தித்துறை வாடி விட்டில் வடமாகாணத்து கவற்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகள், அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற கூறி விற்கப்படும் அல்லது தீந்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும்.

34 காணித்துண்டுகள் வடமாகாணத்து வடமராட்சிப் பகுதியிலிருக்கின்றன.

வடமராட்சிப் பகுதி.

| காணித்துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| | பிளான் இலக்கம் 7,929. குறிச்சி—கரணவாய் தெற்கு. உரித்தாளி—இல்லை. | | | | | |
| 1 | குரும்பையது | இளையவன் ராமன் | தரிசு நிலம் | 2 | 0 | 34 |
| | பிளான் இலக்கம 7,930. குறிச்சி—கரணவாய் தெற்கு. உரித்தாளி—இல்லை. | | | | | |
| 1 | பத்தையது | வல்லி வேலன் | தரிசு நிலம் | 3 | 0 | 4 |
| | பிளான் இலக்கம் 7,965. குறிச்சி—கரவெட்டி மேற்கு. உரித்தாளி—இல்லை. | | | | | |
| 1 | வைரவெல்லன் | வி. முருகேசு | தரிசு நிலம் | 1 | 0 | 7 |
| | பிளான் இலக்கம் 7,966. குறிச்சி—கரவெட்டி மேற்கு. உரித்தாளி—இல்லை. | | | | | |
| 1 | ஊரிக்கரைம்பையது | எஸ். சின்னவி | வெள்ளம்வரக்கூடிய தரிசு நிலம் | 1 | 0 | 27 |
| | பிளான் இலககவ 7,967. குறிச்சி—கரணவாய் தெற்கு. உரித்தாளி—இல்லை | | | | | |
| 1 | ஊரிச்செம்பாடு | — | தரிசு நிலம் (ரேட்டுக்காக சேமிக்கப் பட வெண்டியது) | 0 | 1 | 9* |
| 2 | ஷை | வி. கனகசபைக் குருக்கள் | தரிசு நிலம் | 1 | 3 | 27 |
| | பிளான் இலக்கம் 7,968. குறிச்சி—கரவெட்டி மேற்கு. உரித்தாளி—இல்லை | | | | | |
| 1 | மாது | கே. கந்தர் | தரிசு நிலம் | 0 | 2 | 14 |
| | பிளான் இலக்கம் 7,158 குறிச்சி—நாகர் கோவில். உரித்தாளி—கே. சின்னையாவும் மறுபேரும். | | | | | |
| 1 | குமரிவயல் அல்லது நாவற் தொடுவாய் | — | 2 பனைகளும் ஒரு கொட்டிலுமுள்ள நெல்வயல் | 3 | 3 | 24† |
| 2 | ஷை | — | தென்னம்தோட்டம் | 0 | 2 | 34† |
| | பிளான் இலக்கம் 7,175. குறிச்சி—நாகர் கோவில். உரித்தாளி—இல்லை. | | | | | |
| 5 | மணல் காடு | சின்னையா வேலுப்பிள்ளை | தரிசு நிலம் | 0 | 2 | 39 |
| 6 | ஷை | விளுகி செல்லையா | ஷை | 0 | 1 | 21 |
| | பிளான் இலக்கம் 7,746. குறிச்சி- கரணவாய் தெற்கு. உரித்தாளி—கே. சின்னத்தம்பியும் எஸ். முருகேசும். | | | | | |
| 3 | ராமன் தாழ்வு | — | வரம்பு கட்டப்பட்ட தரிசு நிலம் | 0 | 1 | 14 |
| | பிளான் இலக்கம் 7,776. குறிச்சி—நாகர் கோவில். உரித்தாளி—இல்லை. | | | | | |
| 3 | நாவலடி | சின்னக்குட்டி சுப்பையா | பற்றைக்காடு | 1 | 0 | 3 |

பிளான் இலக்க 7,797. குறிச்சி—தனக்கார குறிச்சி. உரித்தாளி—எஸ். சிதம்பரபிள்ளை ஐயர்.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | முக்கறவத்தை அல்லது வெள்ளையன்கலட்டி | — | தரிசு நிலம் | 0 | 0 | 19† |
| 2 | திகதியாவரை | — | தரிசு நிலம் (பாதைக்காக சேமிக்கப் பட வேண்டியது) | 0 | 2 | 0* |
| 6 | முக்கறவத்தை அல்லது வெள்ளையன்கலட்டி | — | தரிசு நிலம் | 0 | 2 | 35† |

பிளான் இலக்கம் 7,932. குறிச்சி—வல்லிபுரம். உரித்தாளி—வல்லிபுரம் கோவில் பராபரிப்புக்காறர்.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | தரவை | வி. கொத்தர் | தரிசுநிலம் | 1 | 1 | 15 |

பிளான் இலக்கம் 7,938. குறிச்சி—வராத்துப்பளை. உரித்தாளி—இல்லை.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஆனைவிளுந்தான் | கே. சுப்பிரமணியம் | தரிசுநிலம் | 1 | 3 | 26 |
| 2 | ஷை | — | தரிசுநிலம் வண்டில்பாதைக்காக சேமிக்கப்பட வேண்டியது | 0 | 0 | 12* |

பிளான் இலக்கம் 7,939. குறிச்சி—கரணவாய் தெற்கு. உரித்தாளி—இல்லை.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | வெல்லங்கிராய் | எஸ். நமசிவாயம் | தரிசுநிலம் | 1 | 0 | 10 |
| 2 | ஷை | எஸ். கிட்டினன் | ஷை | 1 | 0 | 3 |
| 3 | ஷை | — | தரிசுநிலம் றோட்டுக்காக சேமிக்கப் பட வேண்டியது | 0 | 0 | 14* |
| 4 | ஷை | நாகமுத்து வெள்ளைக்குட்டி | தரிசுநிலம் | 1 | 3 | 32 |
| 5 | ஷை | வயித்தியாம்பிள்ளை பெண் ஆறுசிப்பிள்ளை | ஷை | 0 | 2 | 2 |
| 6 | ஷை | நீலர் நாகமுத்து | ஷை | 2 | 0 | 15 |
| 7 | வெல்லன்கிராய்வயல் | வல்லிவளத்தியான் | ஷை | 2 | 0 | 29 |
| 8 | வெல்லன்கிராய் | — | தரிசுநிலம் (வாய்க்காலுக்காக சேமிக் கப்பட வேண்டியது) | 0 | 0 | 37* |
| 9 | ஷை | ராமர் சுப்பர் | தரிசுநிலம் | 1 | 0 | 4 |

பிளான் இலக்கம 7,940. குறிச்சி—தம்பளை. உரித்தாளி—இல்லை.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஈவினை | — | தரிசுநிலம் (பாதைக்காக சேமிக்கப் படவேண்டியது) | 0 | 0 | 2* |
| 2 | ஷை | கே. வேலன் | தரிசுநிலம் | 0 | 0 | 22† |
| 3 | ஷை | — | தரிசுநிலம் (கடல்கரைக்காக சேமிக் கப்பட வேண்டியது | 0 | 1 | 14* |
| 4 | ஷை | — | தரிசுநிலம் (பாதைக்காக சேமிக்கப் பட வேண்டியது | 0 | 0 | 4* |

பிளான் இலக்கம் 7,960. குறிச்சி—தனக்காரகுறிச்சி. உரித்தாளி—ஆறுமுகம் தம்பிமுத்து.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | தலைவக்குளக்குதழவை | எஸ். கந்தையா | தரிசுநிலம் | 0 | 2 | 2 |
| 2 | ஷை | எம். வீரகத்தி | ஷை | 0 | 2 | 0 |

* விற்பனவுக்கல்ல.
† இக்காணிகள் மதிப்பு விலையில் தீர்ந்துவிடப்படும்.

இக்காணிகளின் மதிப்புவிலை விற்பனவன்று தெரிவிக்கப்படும். மறுவிபரங்கள் வடமாகாண ஏசண்டரிடமிருந்தும் படங்கள் அளவுகந்தோர் தலைவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1931 ம் ஆல் வைகாசிமீ 25 ந் உ.

பீ. எச். பேர்டிலன்,
கோலோனியல் சக்கிறுத்தார்.

---

**Jaffna No. 34.**—1931 ம் ஆண்டு ஆடிமீ 13 ந் திகதி திங்கட்கிழமை 10 மணிக்கு யாழ்ப்பாண கச்சேரியில் வடமாகாணத்து கவற்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகள், அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீர்ந்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும்.

36 காணித் துண்டுகள், வடமாகாணத்து கரைச்சி தென்மராட்சிப் பகுதியி லிருக்கின்றன.

கரைச்சிப் பகுதி.

நீர்ப்பாய்ச்சல் பிள்ளான் இலக்கம் 3. குறிச்சி—பெரியபரந்தன். உரித்தாளி—முடி.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 3A | பெரியபரந்தன்காடு | பெரியபரந்தன் சின்னத்தம்பி பொன்னையா | நெல்வயல் | 9 | 0 | 23 |
| 7 | ஷை | வி. ரெட்டினசபாபதி (யாழ்ப்பாண நகரசங்க கந்தோர் | ஷை | 3 | 3 | 1 |
| 7B | ஷை | சின்னத்தம்பி பொன்னையா | ஷை | 5 | 1 | 2 |
| 8 | ஷை | மீசாலை வடக்கு வி. சரவணமுத்து | ஷை | 6 | 0 | 22 |

நீர்ப்பாய்ச்சல் பிளான் இலக்கம் 4. குறிச்சி—பரந்தன். உரித்தாளி—முடி.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 56 | பரந்தன்காடு | ஐயனார் கோவிலடி எஸ். ரி. சபாபதிப்பிள்ளை | நெல்வயல் | 23 | 2 | 0 |
| 61 | ஷை | வண்ணார்பண்ணை தென்கிழக்கு கந்தர் கதிரவேலு | ஷை | 9 | 1 | 10 |
| 79 | ஷை | ஷை ஏ. அம்பலவாணர், வண்ணார் பண்ணை பிரக்கிராசியார் | ஷை | 33 | 3 | 25 |

நீர்ப்பாய்ச்சல் பிளான் இலக்கம் 5. குறிச்சி—முரசுமோட்டை. உரித்தாளி—முடி.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 53U | முரசுமோட்டைகாடு | கிளிநொச்சி முக்கன் வெள்ளையன் | நெல்வயல் | 9 | 3 | 16 |

நீர்ப்பாச்சல் பிளான் இலக்கம் 5 கூட்டுப்படம் 1. குறிச்சி—முரசுமோட்டை. உரித்தாளி—முடி.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 84 | ஷை | சிறும்பியடி ஏ. வேலுப்பிள்ளை | நெல்வயல் | 4 | 1 | 25 |
| 85 | ஷை | ஷை | ஷை | 11 | 3 | 24 |

நீர்ப்பாச்சல் பிளான் இலக்கம 5 கூட்டுப்படம் 2. குறிச்சி—முரசுமோட்டை. உரித்தாளி—முடி.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 2 | ஷை | வண்ணார்பண்ணை கிழக்கு ஏ. தில்லையம்பலம் | நெல்வயல் | 5 | 2 | 22 |
| 3 | ஷை | இருபாலை எஸ். இரகுநாதர் | ஷை | 1 | 1 | 2 |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| | | தென்மராட்சிப் பகுதி. | | | | |
| | நீர்ப்பாச்சல் பிளான் இலக்கம் 7,762. குறிச்சி—கைதடி. உரித்தாளி—வீ. சங்கரப்பிள்ளை. | | | | | |
| 1 | கூளாவடித்திடல் .. | — .. | .. 5 தென்னைகளும் 2 கொட்டில்களு முள்ள தோட்டம் | 0 | 2 | 3 |
| | உரித்தாளி—கே. வேலுப்பிள்ளை, ஏ. சுப்பர், கே. சின்னத்தம்பி. | | | | | |
| 2 | ஷை .. | — .. | .. தரிசுநிலம் .. | 0 | 1 | 0 |
| | உரித்தாளி—சடையன் வீரகத்தி, விளுசி சின்னப்பொடியன். | | | | | |
| 7 | கூளாவடிக்காடு .. | — | .. தென்னைகளும் 3 கொட்டில்களு முள்ள தோட்டம் | 0 | 1 | 28 |
| | நீர்ப்பாச்சல் பிளான் இலக்கம் 5. கூட்டுப்படம் 2. குறிச்சி—முரசுமோட்டை. உரித்தாளி—முடி. | | | | | |
| 4 | முரசுமோட்டைக்காடு .. | அராலி எம். தெட்சணாமூர்த்தி .. | .. தென்னைகளும் 3 கொட்டில்களு முள்ள தோட்டம் | 1 | 0 | 18 |
| 6 | ஷை .. | வண்ணார்பண்ணை எஸ். கே. கந்தையாபிள்ளை .. | ஷை .. | 1 | 3 | 26 |
| 7 | ஷை .. | தின்னவேலி வி. எஸ். கந்தையாபிள்ளை .. | ஷை .. | 2 | 2 | 25 |
| 8 | ஷை .. | சுண்டிக்குளி காலம்சென்ற வி. எம். நாகலிங்கத்தின் மனைவி | ஷை .. | 1 | 1 | 28 |
| 9 | ஷை .. | நல்லூர் இ. இராமலிங்கம் .. | .. ஷை .. | 3 | 1 | 15 |
| 13 | முரசுமோட்டைக்காடு .. | தெல்லிப்பளை, வி. எஸ். சுப்பிரமணியம் | .. நெல்வயலும் பற்றைக்காடு | 2 | 1 | 9 |
| 14 | ஷை .. | ஷை .. | .. ஷை .. | 0 | 1 | 13 |
| 17 | ஷை .. | தெல்லிப்பளை, வி. முத்துக்குமாரு | .. புதிதாய் திருத்தப்பட்ட நிலம் | 3 | 1 | 35 |
| 27 | ஷை .. | சின்னத்துரை—சிராம்பியடி, ஏ. வேலுப்பிள்ளை (பார்வை) | ஷை .. | 1 | 0 | 6 |
| 28 | ஷை .. | சிறும்பியடி, ஏ. வேலுப்பிள்ளை | .. பற்றைக்காடு .. | 0 | 2 | 5 |
| 29 | ஷை .. | ஷை .. | .. நெல்வயல் .. | 2 | 3 | 20 |
| | நீர்ப்பாச்சல் பிளான் இலக்கம் 5. அனுபடம் 1. குறிச்சி—முரசுமோட்டை. உரித்தாளி—முடி. | | | | | |
| 87 | ஷை .. | வைமன் றோட்டு, எஸ். கந்தையா | .. நெல்வயல் .. | 0 | 0 | 17 |
| | நீர்ப்பாச்சல் பிளான் இலக்கம் 5. அனுபடம் 2. குறிச்சி—முரசுமோட்டை. உரித்தாளி—முடி. | | | | | |
| 31 | ஷை .. | வைமன்றோட்டு, எஸ். கந்தையா | .. நெல்வயல் .. | 0 | 1 | 23 |
| 34 | ஷை .. | வண்ணார்பண்ணை, எஸ். பி. கஸ்தூரிநாயுடு | .. ஷை .. | 1 | 0 | 16 |
| | நீர்ப்பாச்சல் பிளான் இலக்கம் 5. அனுபடம் 1. குறிச்சி—முரசுமோட்டை. உரித்தாளி—இல்லை. | | | | | |
| 90 | ஷை .. | சேணியதெரு, என். கதிரேசபிள்ளை | .. நெல்வயல் .. | 0 | 0 | 19 |
| | நீர்ப்பாச்சல் பிளான் இலக்கம் 5. அனுபடம் 2. குறிச்சி—முரசுமோட்டை. உரித்தாளி—இல்லை. | | | | | |
| 33 | ஷை .. | சேணியதெரு, என். கதிரேசபிள்ளை | .. நெல்வயல் .. | 0 | 2 | 1 |
| | நீர்பாய்ச்சற் பிளான் இலக்கம் 5. அனுபடம் 3. குறிச்சி—முரசுமோட்டை. உரித்தாளி—முடி. | | | | | |
| 7 | ஷை .. | சுண்டிக்குளி, ரி. யே. முத்தையா | .. வெளிநிலம் .. | 1 | 0 | 5 |
| 8 | ஷை .. | சுண்டிக்குளி, ஏ. மிக்கேல்பிள்ளை | .. தோட்டம் .. | 1 | 3 | 27 |
| 10 | ஷை .. | யாழ்ப்பாண மேற்றிராணி ஆண்டவர் | .. வெளிநிலம் .. | 0 | 2 | 0 |
| 11 | ஷை .. | கிளிநொச்சி, வி. வேலுப்பிள்ளை | .. தோட்டம் .. | 0 | 3 | 21 |
| | நீர்ப்பாச்சல் பிளான் இலக்கம் 5. அனுபடம் 6. குறிச்சி—இரணமடு. உரித்தாளி—முடி. | | | | | |
| 1B | இரணமடுக்காடு .. | தங்கபோயன், கிளிநொச்சி .. | .. பற்றைக்காடு .. | 0 | 3 | 24 |

இக்காணிகளைப்பற்றிய மறு விபரங்கள் வட மாகாண ஏசன்றரிடமிருந்தும் படங்கள் அளவுகந்தோர் தலைவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். இக்காணிகளுள் 7,762 படத்தில் 1, 2, 7 ம் கண்டங்கள் தவிர ஏனைய காணிகள் வெங்கீசிலில் விற்கப்படாமல் இவ்விளம்பரத்தில் கேள்விக்காறர் என்று காட்டப்பட்டிருக்கும் ஆட்களுக்கே விற்கப்படும்.

கொலோனியல் சக்கிடுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1931 ஆண்டு வைகாசிமீ 25 ந் திகதி.

பீ. எச். பேர்டிலன்,
கொலோனியல் சக்கிறுத்தார்.

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் வரு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் றனலவில் ஒரு கிணற்றுக்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 20,237. குறிச்சி—றனல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | தெல்ககவத்த .. | தோட்டம், 1 ஈரப்பலாவும், 2 தென்னையுமுள்ளது | ஆர். டி. ஜி. விஜயவர்தன .. | 0 | 0 | 2·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் வரு—த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதிஅவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதினால் அக்காணியை ஆட்சிஷப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் வரு ஆடி மாசம் 14 ந் தேதியிலன்று 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1931 ம் வரு வைகாசிமீ 25 ந் உ.

ஈ. டபிள்யு. கன்னங்கர,
யேலதிக அரசாட்சி ஏசண்டு.

T 2

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கட்டுகஸ்தோட்டை—பலபத்வெலதெருவில் 10/10, 10/12 ம் மதவுகளுக்கிடையில் முடக்குகளை திருத்துதற் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 9,022. குறிச்சி—அலவத்துகொட, உடகம்பகா கோறளை, கிரிஸ்பத்து.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பொல்தெனியகும்புற | வயல் .. | சஹுமாலெவையும், காபீபு முகம்மது லெவ்வையும் | 0 0 2·8 |
| 2 | ஷை .. | வயல் .. | ஏச். எல். டி. புஞ்சி அப்புகாமி .. | 0 0 12·2 |
| 3 | கக்கெடிபல்லகும்புற | வயலும் சிற்றுறும் .. | அலவத்கொட சம்மான்தேவாலய பராமரிப்புகாறர் | 0 0 17·8 |
| 4 | சிஸ்ரன் எஸ்ரேற் .. | பாண்நிலம் .. | ஜோர்ஜ் ஸ்ரூஆட் அன்ட் கொம்பெனி .. | 0 0 2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம பிரிவின் ஏற்பாடுகளின்பிரகாரம மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1931 ம் ஞு ஜுலை மாசம் 3 ந் தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1931 ம் ஞு மே மீ 25 ந் உ.

டபிள்யு. டீ. கொட்சோல்,
உதவி அரசாட்சி ஏசண்டு, கண்டி.

---

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நாவுலையில் கிராமக்கோட்டுக்கு ரோட்டுப் போவதற்காகவும் ரோட்டுக்காக விடப்பட்டிருக்கு மிடத்துக்கும், காட்டு ஓவசியரின் வாசஸ்தானங்கள் பெருப்பித்தலுக்கும் கூலி வீடுகளுக்கும் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 8,799. குறிச்சி—நாவுல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | வதுரஸ்ஸயாய .. | வெறும் நிலம் .. | செ. எ. வார்சீத், தெமட்டகொட .. | 0 0 2·05 |
| 2 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 0 19·1 |
| 3 | ஷை .. | சேனை .. | ஷை .. | 0 0 1·1 |
| 4 | கனுமுலயாய .. | சேனை .. | ஷை .. | 0 2 33·1 |
| 5 | ஷை .. | சேனை .. | ஷை .. | 0 0 14·8 |
| 6 | ஷை .. | சேனை .. | ஷை .. | 0 0 13·5 |
| 7 | ஷை .. | சேனை .. | ஷை .. | 0 2 7·7 |
| | | | | 1 2 11·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஞு ஜுன் மாசம் 22ந் தேதியிலன்று பின்னேரம் 2 மணிக்கு மாத்தளை கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாததளைக் கச்சேரி,
1931 ம் ஞு மேமீ 26 ந் உ.

சீ. ஈ. ஜோன்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தென்மாகாண மாத்துறைப் பிரிவைச் சேர்ந்த வெல்லபடபத்துவிலுள்ள கந்தறையில் கல்பொடைக்கு ரோட் ஒன்று திறத்தல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 13,980. குறிச்சி—கந்தறை மேற்கு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | தென்னெக்கொணெவத்தை | வெறுங்தோட்டம் .. | (1) கந்தறைவாசியாகிய தென்னுர ஹென்னடிகெ கொர்நேலிஸ் அப்பு, (2) கந்தறைவாசியாகிய கிறிஸ்ரேருகு பதுகே உப்பாசக்க அப்பு, (3) கந்தறைவாசியாகிய அந்தரஹென்னடிகெ சைமன் அப்பு, (4) கந்தறைவாசிகளாகிய அஹங்கமபதுகெ சோனகாமி, (5) பலசாதுறுஹேவகெ தாவீத்சின்ஞோ, (6) பொன்வத்தை றட்டுபதகெ டார்லிஸ் சின்ஞோ, (7) பூஞ்சிஹேவகெ பூஞ்சிநோனு | 0 0 0·62 |
| 2 | ஷை .. | 40 வயதுள்ள ஒரு தென்னமரம் உள்ள தோட்டம் | ஷை .. | 0 0 2·12 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஸ்ரீ ஆடி மாசம் 3 ந் தேதியிலன்று காலமே 10½ மணிக்கு மாத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்துறைக் கச்சேரி,
1931 ம் ஸ்ரீ வைகாசிமீ 18 ந் திகதி.

எச். ஜே. எல். வீக்கிலேயர்,
உப அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தென்மாகாண மாத்துறைப் பிரிவைச்சேர்ந்த வெல்லபட பத்துவிலுள்ள தெவுந்தரை வடக்கில் பகிரங்க குளிக்கிற கிணறொன்று என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 14,284. குறிச்சி—தெவுந்தரை வடக்கு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கல்விந்தபிஹிற்றிவத்தை .. | ஒரு கற்கட்டுக கிணறும் கட்டப்படுகின்ற ஒரு கற்கட்டுக் கிணறும் அழிந்த ஒரு கற்கட்டுக் கொட்டலையுமுள்ள தோட்டம் | தெவுந்தறை வாசிகளாகிய (1) பிலதுவபரன ஹேவாகெ ஐந்திரிஸ் அப்பு, (2) சமரத்தினப்புலி கொடிகாற கங்காணங்கெ கிரிக்கோறிஸ், (3) ஊதிரிவீர ஜயசேகர குருந்துபட்டபெந்திகெ ஜானிஸ்அப்பு, (4) தெனபதுகெ வத்துகாமி, (5) நல்லபெருமஆராச்சிகெ தொன் ஜுவானிஸ், (6) தொன் அந்திரிஸ் சமரநாயக்க மூனசிங்க, (7) தொன் மார்த்தேனிஸ் பிரதிநந்திஸ்யாப்பா | 0 0 8·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஸ்ரீ ஆடிமாசம் 3 ந் தேதியிலன்று காலமே 10 மணிக்கு மாத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்துறைக் கச்சேரி,
1931 ம் ஸ்ரீ வைகாசிமீ 18 ந் உ.

எச். ஜே. எல். விக்லேயர்,
உப அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தென்மாகாண மாத்துறைப் பிரிவைச்சேர்ந்த வெலிகம கோறளையிலுள்ள பொள்வத்தையில் பாடசாலையொன்று ஸ்தாபித்தல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 14,292. குறிச்சி—பொள்வத்தை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | றடதோட்டவத்தை . | 30–45 வயசுள்ள 47 தென்னமரங்களும், 20–25 வயசுள்ள 3 தென்னமரங்களுமுள்ள தென்னந்தோட்டம் | பொள்வத்தை வாசியாகிய சார்ள்ஸ் டியஸ் விஷயசிறிஜயவர்த்தன கருணாரத்தின வீரமன் அப்புகாமி | 0 1 1 |
| 2 | சில்லகெவத்தை .. | 60–70 வயசுள்ள 19 தென்னமரங்களும், 15–30 வயசுள்ள 43 தென்னமரங்களுமுள்ள தென்னந்தோட்டம் | (1) பாணந்துறைவாசியாகிய ஹென்றி எமா அலிஸ் வீரமன், (2) பாணந்துறைவாசியாகிய ரேய் எட்வேர்ட் டியஸ் விஜயசிறி ஜயவர்த்தன கருணரத்தின வீரமன், (3) பாணந்துறை வாசியாகிய ஜோவிஸ் கொர்னேலியா விஷயசிறி ஜயவாத்தன கருணரத்தின வீரமன், (4) பாணந்துறை வாசியாகிய மொனெறீவ் எட்வேட் டியஸ் விஷயசிறி ஜயவர்த்தன கருணரத்தின வீரமன், (5) கண்டியைச்சேர்ந்த அம்பிற்றியாவிலுள்ள மேபெல் அலிஸ் செனரத்தின, (6) மீக்கொடை வாசியாகிய றெசியா பீற்றிரிஸ் ஜயசூரிய | 0 2 23·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஸ்ரீ ஆடி மாசம் 3 ந் தேதியிலன்று காலமே 10 மணிக்கு மாத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்துறைக் கச்சேரி,
1931 ம் ஸ்ரீ வைகாசிமீ 18 ந் உ.

எச். ஜே. எல். வீக்லேயர்,
உப அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஷூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தென்மாகாண மாத்துறைப் பிரிவைச் சேர்ந்த கந்தபடபத்துவிலுள்ள நரவெல்பிற்ற தெற்கில் பகிரங்க கிணறொன்று கட்டுதல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

188 ம் இல. கடைசிக்குறிச்சிப் படத்தின் B பகுதி. குறிச்சி—நரவெல்பிற்ற தெற்கு.
விவரம்—ஒரு தண்ணீரூற்றுள்ள பழைய நெல்வயல்.

| துண்டு. | காணியினது பெயர். | உரித்தாளியின்பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|
| 151▲ | பலக்கஹாகொ தெல்ல | நரவெல்பிற்ற வாசிகளாகிய (1) ஹெவஅங்தோனிகெ ஜாந்திரிஸ், (2) ஹேவஅங்தோனிகெ நந்தோரிஸ், (3) ஹெவஅங்தோனிகெ திஷன், (4) ஹெவஅங்தோனிகெ ஜானி, (5) ஹெவஅங்தோனிகெ சிந்தரி, (6) ஹெவஅங்தோனிகெ சிலிந்தி, (7) ஹெவஅங்தோனிகெ தொந்திரிஸ், (8) ஹெவஅங்தோனிகெ செந்திரிஸ், (9) ஹெவவலிமுனிகெ நிக்கீலஸ், (10) ஹெவவலிமுனிகெ ஐயந்திரிஸ், (11) ஹெவவலிமுனிகெ உபேரிஸ், (12) ஹெவவலிமுனிகெ ஃமியானி, (13) ஹெவவலிமுனிகெ கதிரிஞ, (14) ஹெவவலிமுனிகெ அல்லிஸ், (15) ஹெவவலிமுனிகெ தாஷன், (16) ஹெவ்வலிமுனிகெ உப்பேரிஸ், (17) ஹெவவலிமுனிகெ திந்து, (18) எள்ளவெலே வாசியாகிய ஹெவவலிமுனிகெ திஷன், (19) நரவெல்பிற்ற வாசிகளாகிய ஹெவவலிமுனிகெ எலியஸ், (20) ஹெவவலிமுனிகெ பபாந்திரிஸ், (21) ஹெவவலிமுனிகெ வையா, (22) ஹெவவலிமுனிகெ சைமன், (23) பேதுரு ஆராச்சிகெ குணேந்தரி, (24) பேதுருஆராச்சிகெ செதோ, (25) பேதுருஆராச்சிகெ உப்பேரிஸ், (26) பள்ளெகங்கொட உகுன்புரகெசெலயா, (27) பள்ளெகங்கொட உகுன்புரகெ தோவ, (28) பள்ளெகங்கொட உகுன்புரகெ பபுஞ, (29) பள்ளெகங்கொட உகுன்புரகெ பபாந்திரிஸ், (30) சுதுகாகுணெகெ அந்திரிஸ். (31) கமகெ விந்துவ, (32) கமகெ சைமன், (33) கமகெ இன்னியா, (34) கமகெ தேனிஸ், (35) கமகேசெந்தோரிஸ், (36) ஹெவஅலந்தரகெ ஜயந்திரிஸ், (37) ஹெவஅலந்தரகெ திங்கிரிஸ், (38) உயங்கொடகெ கரோஞ்சியா, (39) கொங்கஹுவாசியாகிய ஹெவசிங்கப்புலிகெ சிஞ்ஞோ, (40) நரவெல்பித்த வாசிகளாகிய தொலமுல்லெஹெவகங்காணங்கே தொந்திரிசும், (41) நம்முனிஆராச்சிகெ வவானிசாவும், (42) நம்முனிஆராச்சிகே அகோரிசும் | 0 0 10·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின் படி வேண்டிய பிரகாரம நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஷூ ஆடி மாசம் 7 ந் தேதியிலன்று காலமே 11 மணிக்கு அக்மனே வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்துறைக் கச்சேரி,
1931 ம் ஷூ வைகாசி மீ 22 ந் வ.

எச். ஜே. எல். விக்லேயர்,
உப அரசாட்சி ஏசண்டு.

---

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இலக்கம் 10,891. மாத்தளை.]

**1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம, 1927 ம ஆண்டுகளின் வெண்நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.**

இதிலே பின்னர் சொல்லப்படும் காணியிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1931 ம் ஷூ மேமீ 29 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே மாத்தளை கச்சேரியில் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி. சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு 1897 ம் ஆண்டின் 1 ம் இல. சட்டத்தினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணி முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

சீ. ஈ. ஜோன்ஸ்,
உதவி ஏசென்று.

குறிப்பு.—(a) இக்காணியைப்பற்றி இன்னும் மேலதிகமான விபரம் உதவி அரசாட்சி ஏசன்டரிடமும் அவைகளின் அளவுப்படங்கள் நில அளவுக்காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணியிலெவெற்றிலேனுமுள்ள வழியுரித்து அககாணிக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

சொல்லப்பட்ட காணியின் விபரம்,

மத்திய மாகாணத்தின் மாத்தளை ஜில்லாவின் மாத்தளை தென்பிரிவின் கம்பகசியாபத்தில் இரிய கொல்லா கிராமத்திலுள்ள கீழ்க்கண்ட காணி; இக்காணி அமைந்துள்ளது கீழே சொல்லிய எல்லைக்குள்

வடக்கு : ரி. பி. 55,706.

கிழக்கு : ரிக்கிரிவண்டா சிரிவண்டா கொஸ்வத்தகெதற அப்புகாமி என்பவர்களாலும் அரசாட்சியாராலும் உரித்தாடப்படும் நககககாமுலகேனவும் (8,961 ம் பிரதமபடத்தில் 2 ம் 3 ம் துண்டுககாணிகள்) ரி. பி. 161,831 ம் ;

தெற்கு-மேற்கு : கொஸ்வத்தைகெதற அப்புகாமி, கிரிவண்டா ரிகசிரிவண்டா என்பவர்களாலும் அரசாட்சியாரராலும் உரித்தாடப்பட்ட நககககாமுலகேன (8,961 ம் பிரதம படத்தில் 2 ம் துண்டுககாணி.

---

[அறிவித்தல் இலக்கம் 10,892, குருணக்கல்.]

**1897 ம், 1899 ம், 1900 ம, 1903 ம, 1927 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் பிரகாரம் அறிவித்தல்.**

இதன்பின் சொல்லப்படும் காணிக்குள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள் 1931 ம் ஷூ வைகாசிமீ (மே) 29 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் வடமேன் மாகாண ஏசென்றருககு குருநாக்கல் கச்சேரியில் அவர் கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குள்ள உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் மேற்சொல்லிய கவண்மேந்து ஏசன்றர் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம், 1927 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் பிரகாரம் தமக்குள்ள அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணியை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைசாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. ஆர். வால்ரஸ்,
வடமேல் மாகாண ஏசென்றர்.

குறிப்பு.—(a) இக்காணியைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் வடமேல் மாகாண ஏசன்றரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணியி லெவற்றிலே னுமுள்ள வழியுரித்து அக் காணிக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

மேற்கூறிய காணியின் விபரம்.

கீழ்சொல்லப்படுங் காணித்துண்டு வடமேல் மாகாணத்தில் குருநாக்கல் டிஸ்திறிக்கில் தெவமெதிகற்பத்துவில் வல்கம்பத்து கோறளேயில் மகாகெலியா கிராமத்தில் இருக்கிறது.

பிரதமபடத்து இலக்கம் 6,852.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|
| 1 | — (கற்பாறை) | 0 3 18 |

எல்லை-வடக்கே: சுமங்கல உரித்தாடும் கோலாலகல பான்சல; கிழக்கே-பி. ஜெரக்கின் அப்புகாமி உரித்தாடும் கண்டியவத்த; தெற்கே-கற்றுப்பொத்தவிலிருந்து மகாகெலியாவுக்குப் போகும் றோட்டு; மேற்கே-முடி உரித்தாடும் மலைக்குன்று.

---

[அறிவித்தல் இலக்கம் 10,893, குருநாக்கல்.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம, 1927 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் பிரகாரம் அறிவித்தல்.

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும், பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1931 ம் ஹூ (மே) வைகாசிமீ 29 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திறகுள், வடமேல் மாகாண ஏசன்றருக்கு குருநாக்கல் கச்சேரியில் அவர் கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குள்ள உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் மேற்சொல்லிய கவண்மேந்து ஏசன்றர் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம், 1927 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் பிரகாரம் தமக்குள்ள அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைசாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. ஆர். வால்ரேஸ்,
வடமேல் மாகாண ஏசன்றர்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் வடமேல் மாகாண ஏசன்டரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக் காணிக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

மேற்கூறிய காணியின் விபரம்.

கீழ்சொல்லப்படுங் காணித்துண்டுகள் வடமேல் மாகாணத்தில் குருநாக்கல் டிஸ்திறிக்கில் மகாகலபொட மெகொடகோறளை வடக்கில் பமுனபொத்த கிராமத்தில் இருக்கின்றன.

I.—பிரதமபடத்து இலக்கம் 6,768.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|
| 2 | பல்லெவெல அமுன | 0 1 8 |

எல்லை: வடக்கே-எஸ். பி. எம். உக்கு அம்மாவும் மறுவும் உரித்தாடும் பகலகமெவத்த; கிழக்கேயும் தெற்கேயும்-எஸ். பி. எம். றன்மெனிக்காவும் மறுவும் உரித்தாடும் பல்லெவெலகும்புற; மேற்கே-எச். எம். புஞ்சிபண்டா விதானையும் மறுவும் உரித்தாடும் டம்பககாகும்புற.

II.—பிரதமபடத்து இலக்கம் 6,768.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|
| 3 | கதுருககபெலசவவ | 2 3 25 |
| 4 | கல்கின்ன | 0 2 11 |
| | மொத்தம் | 3 1 36 |

எல்லை: வடக்கே-பமுனபொத்தவிகாரையின் பொறுப்பாளர்கள் உரித்தாடும் பான்சல்வத்த; கிழக்கே-எஸ். என். எம். ரிக்கிறிபண்டா உரித்தாடும் வெபொடவத்தவும், கே. டபிள்யு. கேத்துவா உரித்தாடும் வெபொடவத்தவும், எச். எம். றன்காமி கோறளையும மறுவும் உரித்தாடும் வெபொடகும்புறவும், எஸ். வை. பி. எம். முத்துமெனிக்கா உரித்தாடும் வெபொடபில்லாவும்; தெற்கே-எஸ். வை. பி. எம். முத்துமெனிக்கா உரித்தாடும் டூப்பொத்தெகும்புறவும், எச். எச். எம். றன்காமி கோறளை உரித்தாடும் டூப்பொத்தெகும்புறவும்; மேற்கே-எஸ். பி. எம். அப்புகாமியும் மறுவும் உரித்தாடும் வெல்கொற்றுவெகும்புறவும், எஸ். பி. எம். கிறிபண்டா உரித்தாடும் வெல்கெற்றுவெவத்தவும், பமுனபொத்தவிகாரையின் பொறுப்பாளர்கள் உரித்தாடும் பான்சல்வத்தவும்.

[அறிவித்தல் இலக்கம் 10,894, குருணகல்.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம், 1927 ம், ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் பிரகாரம் அறிவித்தல்.

இதன்பின் சொல்லப்படும் காணிக்குள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1931 ம் ஹூ (மே) வைகாசிமீ 29 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் வடமேல் மாகாண ஏசென்ருக்கு குருநாகல் கச்சேரியில் அவர் கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குள்ள உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில மேற்சொல்லிய கவண்மேந்து ஏசன்றர் 1897 ம, 1899 ம, 1900 ம, 1903 ம, 1927 ம, ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் பிரகாரம் தமக்குள்ள அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத்தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. ஆர். வால்ரேஸ்,
வடமேல் மாகாண ஏசன்றர்.

குறிப்பு.—(a) இககாணியைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் வடமேல் மாகாண ஏசண்டரிடமும் அதின் அளவைப்படங்கள் நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணியி லெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக் காணிக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

மேற்கூறிய காணியின் விவரம்.

கீழ் சொல்லப்படுங் காணித்துண்டு வடமேல் மாகாணத்தில் குருநாக்கல் டிஸ்திறிக்கில் வாயுடவிலிகறபத்துவில் மகாகல்பொட கோறளை வடக்கில் மிறிகம்புற கிராமத்தில் இருக்கிறது.

பிரதமபடத்து இலக்கம் 6,768.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|
| 1 | இகலவவ | 0 3 2 |

எல்லை: வடக்கே-மிரிகம்புறவிலிருந்து தல்விற்றவுக்குப் போகும் றோட்டும், டபிள்யூ. உககுபண்டா உரித்தாடும வவபாலவும் கும்புறவும்; கிழக்கே-எஸ். பி. எம் பண்டா உரித்தாடும கொட்டிக்கமெவத்தவும், பமுனபொத்தவிலிருந்து மிறிம்புறவுக்குப் போகும றோட்டும; தெற்கே-இ. எம். கிறிபண்டா உரித்தாடும வவஇகலவத்தவும், எச். எம. டிங்கிறி அம்மா உரித்தாடும் வவஇகலவத்தவும; மேற்கே-டபிள்யூ. கேறத்காமியும மறுவும உரித்தாடும இகலவவகும்புற.

---

[அறிவித்தல் இலக்கம் 10,895, குருணகல்.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம், 1927 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் பிரகாரம் அறிவித்தல்.

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள், 1931 ம் ஹூ மே (வைகாசி)மீ 29 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் வடமேல்மாகாண ஏசென்றருக்கு குருணகல் கச்சேரியில் அவர் கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குள்ள உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் மேற்சொல்லிய கவண்மேந்து ஏசென்றர் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம், 1927 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் பிரகாரம் தமக்குள்ள அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. ஆர். வால்ரேஸ்,
வடமேல் மாகாண ஏசன்றர்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும மேலதிகமான விபரம் வடமேல் மாகாண ஏசன்றரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் நில அளவைக்காரியகர்த்தரிடமும பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக் காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

மேற்கூறிய காணிகளின் விபரம்.

கீழ்சொல்லப்படும் காணித்துண்டுகள் வடமேல்மாகாணத்தில் குருநாகல் டிஸ்திறிக்கில் மகாகல்பொட்மெகொட கோறளை வடக்கில் வறத்தன கிராமத்திலிருக்கின்றன.

### I.—பிரதமபடத்து இல. 6,768.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 5 | பகலவவ .. .. | 1 1 2 |

எல்லை: வடக்கே-எச். எம். றன்காமி கோறளையும் மறுவும் உருத்தாடும் வெல்பில்லாவ; கிழக்கே-ஏ. ஏ. எம். முதியான்சேயும் மறுவும் உரித்தாடும் அஸ்வெத்தும; தெற்கே-எஸ். பி. எம. றன்பண்டாவும மறுவும உரித்தாடும வெல்கொற்றுவெகும்புற; மேற்கே-எஸ். பி. எம. றன்பண்டாவும மறுவும உரித்தாடும வெல்கொற்றுவெகும்புறவும, எச். எம. றன்காமிகோறளையும மறுவும உரித்தாடும ஹப்பற்கமறூலகெடஹுபொத்தவும.

### II.—பிரதமபடத்து இல. 6,768.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 6 | அம்பலன்வவ .. .. | 0 2 37 |
| 7 | வறத்தனவெலபில்லாவ (குளக்கட்டோரத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது) | 0 0 11 |
| | | 0 3 8 |

எல்லை: வடக்கே-ஜே. எம். டிங்கிறிமெனிக்கா உரித்தாடும வெபொடெகும்புறவும், யூ. எம. டிங்கிறிமெனிக்கா உரித்தாடும வறத்தனவெலெபில்லாவவும; கிழக்கே-எஸ். பி. எம. முத்துபண்டா உரித்தாடும நககாகொற்றுவெல்த்த; தெற்கேயும மேற்கேயும-எச். ஏம. புஞ்சிபண்டாவும மறுவும உரித்தாடும அம்பலன்கும்புற.

### III.—பிரத்மபடத்து இல. 6,768.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம ஏ. றூ. ப |
|---|---|---|
| 8 | இகலவவ .. .. | 1 3 34 |

எல்லை: வடக்கே-ஏ. ஏம. கிறிபண்டா உரித்தாடும அஸ்வெத்துமெபில்லாவவும, ஏ. எம். கிறிபண்டா உரிததாடும; அஸ்வெத்துமெபில்லாவவும்; கிழக்கே-ஏ. எம். கிரிவண்டா உரித்தாடும் அஸ்வெத்துமே பில்லாவவும், கே. டிங்கிறிமெனிக்காவும மறுவும உரித்தாடும கொமெருக்நகாபிற்றியெவத்தவும்; தெற்கே-ஏ. பி. துவானும மறுவும உரித்தாடும இக்லவவ பில்லாவவும, ஏ. பி. துவான் உரித்தாடும இகலவவகும்புறவும; மேற்கே-ஆர். எம. உக்குறூல உரித்தாடும கலகவ்கிற்றினவத்தவும, எம. புஞ்சிமெனிக்கா உரித்தாடும வெல்கொற்றுவவும.

---

[அறிவித்தல் இலக்கம் 10,896, கேகாலை.]

**1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம், 1927 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.**

இதிலே பின்னர் சொல்லப்படும் காணியிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள், 1931 ம் ௵ (மே) வைகாசிமீ 29 ௳ தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கேகாலைக கச்சேரியில் கேகாலை உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் அல்லது எழுத்து மூலத்திற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகள் அல்லது அதிலேயாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட காணிகள் அல்லது எக்காணி அல்லது காணிகள் உடந்தைகள் குறித்த உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்குச் சொல்ப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணி அல்லது காணிகள் முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

டபிள்யு. ஓ. ஸ்டீவன்ஸ்,
அரசாட்சி ஏசென்று.

குறிப்பு.—(a) இக்காயைப்பற்றிய மேலதிகமான விபரத்தை கேகாலை உதவி அரசாட்சி ஏசன்று அவர்களிடமும் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணியி லெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

சொல்லப்பட்ட காணியின் விபரம்.

சப்பிரகாமமாகாணம், கேகாலை டிஸ்திறிக் பெலிகல்கோறளை கிறவெலிபத்து கிழக்கு அம்பேபுச என்னும கிராமத்திலிருக்கும் காணியின் விவரங்களாவன:—

### 1.—பிரதமபடம் 3,757.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 1 | கிரிவான மூக்கலானை .. .. | 6 2 38 |

எல்லைகளாவன: வடக்கு-கிரிவான மூக்கலானை (முடிக்குரியது துண்டு 4 பி. ப. 3,105), கே. பொடிசிங்கோ அப்புகாமிக்கு மற்றவர்களுக்கும உரிய பொல்காகதொட்டகேன; கிழக்கு-கே. பொடிசிங்கோ அப்புகாமிக்கும மற்றவர்களுக்குரிய மக்குலுகாக மூலவத்தை, கே. பொடிசிங்கோ அப்புகாமிக்கும உரிய மக்குலுகாககேன; தெற்கு-கால்பாதையும எல்ல, கே. கொறநெலிஸ்க்கும மற்றவர்களுக்கும உரிய இலுக்கொல்லிவத்தை; மேற்கு-கே. கொறநெலிஸ்க்கும மற்றவர்களுக்குரிய இலுக்கொல்லிவத்தை, சுமந அப்புகாமிலாகே கொறநெலிஸ்க்குரிய இலுக்கொல்லிலந்தையும கிறிவானிமூக்கலானை (முடிக்குரியது துண்டு 4 பி. ப. 3,105).

---

## அரசாட்சியாரின் விளம்பரங்கள்.

E 62/31

**"1920 ம் ஆண்டின் 1 ம் இலகக வித்தியா பரிபாலன கட்டளைச் சட்டம்."**

மேற்கூறிய கட்டளைச்சட்டத்தின் 25 (1) ம் பிரிவின்படி குருநாகல் நகர சங்க வித்தியா பரிபாலன சபையால் செய்யப்பட்டு, வித்தியா சங்கத்தின் அங்கீகாரம் பெற்று, அதிகாரமந்திர சபையோடுகூடிய தேசாதிபதியவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட உபவிதிகள்.

உத்தமனார் கட்டளைப்படி,
பீ. எச். போர்டிலன்,
கலோனியல் சக்கிறுத்தார்.

கலோனியல் சக்கிறுத்தார், கந்தோர்,
கொழும்பு 1931 ம் ௵ வைகாசிமீ 27 ௳.

உபவிதிகள்.

1. சபை வழமையாய் குருநாகல் கச்சேரியில் அல்லது சபைத் தலைவரால் ஒழுங்கு பண்ணிக்கொடுக்கப்படும் வேறெந்த இடத்திலும் இரண்டு மாசத்துக் கொருமுறை சபையால் நியமிக்கப்படும் தேதிகளில் கூடும்.

2. சபா நாயகர் ஒரு சபைக் கூட்டத்தை எவ்வேளையிலும் அழைக்கலாம். அவர் மூன்று அங்கத்தவரெவராலும் கையொப்பம் வைக்கப்பட்ட வேண்டுகோளின்படி ஒரு சபைக்கூட்டத்தை அழைக்கலாம். இவ்வேண்டுகோள கூட்டம் அழைக்கப்பட வேண்டியதின் நியாயம் என்னவென்பதை விவரிக்கவேண்டும்.

3. கூட்டங்களில் நடத்தப்படவேண்டிய அலுவல்களைக் குறித்த அறிவித்தல் அக்கூட்டங்கள் வழக்கமான கூட்டங்களானாலும், விசேஷ கூட்டங்களானாலும், ஞாயிற்றுக்கிழமைகளையும் பிரசித்த விடுதலை நாட்களையும் தவிர்த்து ஒவ்வொரு கூட்டத்துக்கும் மூன்று நாட்களுக்கு முன்னதாயாகுதல் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் கொடுக்கப்படவேண்டும்.

4. சபாநாயகர் ஒவ்வொரு கூட்டத்திலும் அக்கிராசனம் வகிப்பார். அவர் வராமலிருக்கும் கூட்டங்களில், கூடியிருக்கும் காரியநிருவாக சபையார் தம்மிலொருவரைச் சபையின் அக்கிராசனராய்த் தெரிவுசெய்வர்.

5. சபாநாயகர் அல்லது அவர் இல்லாத பட்சத்தில் அக்கிராசனராயிருக்கும் அங்கத்தவர் கூட்டத்தை ஒழுங்காயும் முறையாயும் நடத்தல் வேண்டும். விவாதத்திலிருக்கும் முறைமை சம்பந்தமான சகல விஷயங்களிலும் அவருடைய தீர்ப்பு முடிவானதும் கடைசியானதுமாகும்.

6. கூட்டங்களின் சமாச்சாரம் ஒரு குறிப்புப் புஸ்தகத்தில் வரையப்பட்டு அக்குறிப்பின் பிரதிகள் கூட்டம்முடிந்தவுடனே அங்கத்தவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

II.—பிள்ளைகளின் கல்வி.

7. சொற்பொருள் விளக்கம்:—

இவ்வுபவிதிகளில், பின்வரும் பதங்கள், விஷயத்தில் அல்லது வாக்கியத் தொடர்பற்றி விரோதமான கருத்துடையனவாய் இருந்தாலொழிய, அவைக்குக் குறிக்கப்பட்ட கருத்துக்களையே உடையனவாயிருத்தல் வேண்டும்:—

"சிறுவன்", "சிறுமி", "பிள்ளை", என்னும் பதங்கள் இத்துடனிணைக்கப்பட்டிருக்கும் A அட்டவிணையில் விவரிக்கப்பட்ட எல்லைக்குள் வசிக்கும் ஒரு சிறுவனை அல்லது ஒரு சிறுமியை அல்லது ஒரு பிள்ளையைக் கருதும்.

"வரவு" என்னும் பதம் ஒழுங்குச்சட்டத்தில் விதித்த பிரகாரம், வரவு டாப்பில் பதிந்திருக்கும் ஒரு முழு வரவு அமைந்ததாக ஒழுங்குச் சட்டத்தால் நியமிக்கப்பட்ட கால வரையையே கருதும்.

"பாடசாலை" என்னும் பதம் 1920 ம் ஆண்டின் 1 ம் இலக்க வித்தியா பரிபாலன கட்டளைச் சட்டத்தின் 10 ம் பிரிவின்படி ஸ்தாபிக்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடசாலை யொன்றைக் கருதுவதுடன், இங்குள்ள B அட்டவணையிற் குறித்துள்ள பாடசாலைகளையும் மேற்கூறிய பிரிவின்படி உண்டாக்கப்படும் ஒழுக்க விதி மூலம இனிமேல் ஸ்தாபிக்கப்படும் அல்லது ஏற்றுககொள்ளப்படும் பாடசாலை யெதையும் அடக்கும்.

8. பாடசாலைக்குப் போகவேண்டிய பிள்ளைகள்:—6 வயசுக்குக் குறையாத அல்லது 14 வயசுக்குக் கூடாத ஒவ்வொரு சிறுவனின் பெற்றோரும் 6 வயசுக்குக் குறையாத அல்லது 12 வயசுக்குக்கூடாத ஒவ்வொரு சிறுமியின் பெற்றோரும் அல்லது முஸ்லீம் தமிழ் சிறுமிகளானால் 6 வயசுக்குக் குறையாத அல்லது 10 வயசுக்குக்கூடாதவர்களாயுமுள்ள சிறுமிகளின் பெற்றோரும் அச்சிறுவன் சிறுமியின் கல்விக்காகப் போதியதும் தகுந்ததுமான வேறு ஒழுங்குகள் செய்திருந்தாலொழிய அல்லது பாடசாலைக்குப் போகாதிருப்பதற்கு நியாயமான காரணம் இருந்தாலொழிய அச்சிறுவனை அல்லது சிறுமியைப் பாடசாலைக்குப் போகச் செய்யவேண்டும். ஆயின் அங்கே புறம்பாக ஒரு பெண் உபாத்தி ஏற்படுத்தப்பட்டிருந்தாலொழிய சிறுமிகளின்வரவு கட்டாயமானதல்ல. மேலும் 8 வயசுக்குக் கீழான சிறுவனாவது சிறுமியாவது தம் தம் வாசஸ்தலத்திலிருந்து ¾ கட்டை தூரத்துக் கப்பாலுள்ள பாடசாலைக்குப் போகவேண்டுமென்ற கட்டாயமில்லை. இன்னும் 8 வயசுக்கு மேற்பட்ட சிறுவன் தன் வாசஸ்தலத்திலிருந்து இரண்டு கட்டை தூரத்துக்கப்பாலுள்ள பாடசாலைக்குப் போக வேண்டுமென்ற கட்டாயமுமில்லை.

ஆயின் 10 வயசுக்கும் 14 வயசுக்குமிடையிலுள்ள ஒரு பிள்ளை ஒழுங்குச்சட்டத்தில் விதிக்கப்பட்ட நாலாம் வகுப்புப் பரீக்ஷையில் வாசினை எழுத்து கணிதம் என்பவற்றில் சித்திபெற்றதாக வித்தியாதரிசியிடம் ஒரு சாட்சிப்பத்திரம் பெற்று நகர வித்தியாபரிபாலனசபைத் தலைவரின் திருப்திக்குப் பிரயோசனமான தொழில் செய்து வந்தால் அவன் அல்லது அவள் பாடசாலைக்குப் போகவேண்டுமென்று ஒருபோதும் கேட்கப்படமாட்டாது.

9. வரவுநேரம்.—சமான வயசுள்ள பிள்ளைகளின் படிப்புக்காகப் பாடசாலை திறந்திருக்கும் முழுநேரமுமே ஒவ்வொருபிள்ளையும் பாடசாலையிற் தங்கியிருக்கும்நேரமாகும். ஆயின், II ம் வகுப்புக்குக் கீழ் உள்ள வகுப்புக்களிற் படிக்கும் எந்தப்பிள்ளையும் ஒரு நாளொன்றுக்கு மூன்று மணித்தியாலத்துக்குமேல் வேலைசெய்ய வேண்டுமென்று கேட்கப்படமாட்டாது.

10 எந்தப் பிள்ளையையாவது ஒரு பாடசாலையில் சேர்த்துக்கொள்ளும்போது அல்லது அப்பிள்ளை அங்கே படித்துவருங்காலத்தில் அவன்யாதும் ஞாயிற்றுக்கிழமைப் பாடசாலைக்கு அல்லது சமய ஆராதனை நடக்கும் இடத்துக்குப் போகவேண்டுமென்ற அல்லது போவதிலிருந்து விலகிக்கொள்ளவேண்டு மென்ற அல்லது பாடசாலையிலாவது வேறெங்கேயாவது யாதும் சமய ஆசாரத்துக்காவது, சமய விஷயங்களைப்பற்றிய எப்போதனைக்காவது போகவேண்டுமென்ற நிபந்தனையில்லை. அவன் அப்படிப்பட்ட ஆசாரத்தைக் கைக்கொள்ளாதபடி அல்லது கேட்காதபடி தன் பெற்றோரால் அல்லது பாதுகாவலனால் தடுக்கப்படலாம். மேலும், அவன் பெற்றோர் சேர்ந்திருக்கும் சமய கூட்டத்தாரால் சமயவிஷயமாய் அநுசரிக்க வேண்டுமென்று பிரத்தியேகமாய்க் குறித்திருக்கும் எந்த நாளிலாவது பாடசாலைக்குப் போகவேண்டுமென்ற நிபந்தனையுமில்லை.

11. நகரசங்கத்தின் எல்லைக்குள் வசிக்கும் 6 வயசு தொடக்கம் 14 வயசு மட்டுமுள்ள பிள்ளைகளின் தொகையையறியும் பொருட்டு, குறிக்கப்பட்ட பகுதிக்குளுள்ள குடித்தனக்காரருக்கு அட்டவணைப் பத்திரங்கள் கொடுப்பித்து அவர்களில் ஒவ்வொருவரும் குறிக்கப்பட்ட அட்டவணையில் தத்தம் வீட்டிலுள்ள ஒவ்வொரு பிள்ளையின் பெயரும், சாதியும், ஆணோ பெண்ணோ வென்பதும், வயசும், பிள்ளையின் பெற்றாரின் பெயர்களும், பிள்ளை போகும் பாடசாலையின் பெயரும், இருக்குமிடமும் பதிந்து அல்லது பதிவதற்கு வேண்டிய விவரங்களைக் காட்டி அட்டவணை கொடுக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள், தேவையான முழு விவரங்களுடனும் அவைகளைத் திருப்பிக்கொடுக்க வேண்டுமென்று கேட்பது காரியநிருவாக சபையாருக்கு முறைமையாயிருக்கும்.

12. இவ்விதிகளை அல்லது இவைகளில் எதையாவது அநுசரியாதிருக்கும் அல்லது அசட்டைபண்ணும், அல்லது மீறும் பெற்றோர் ஒவ்வொருவரும் குற்றப்படுத்தப்பட்டபோது ஒவ்வொரு குற்றத்துக்கும் 5 ரூபாய்க்கு மேற்படாத தெண்டமிறுப்பதற்கும், தொடர்ச்சியான குற்றமாகில் நாளொன்றுக்கு ஒரு ரூபாய்க்கு மேற்படாத மேலதிக தெண்டத்துக்கு மாளாவார்கள்.

13. எந்தப் பாடசாலையாவது நாளாந்தம் போசனம் முதலியவைகளான இடைநேரங்களையும் சேர்த்து 6 மணித்தியாலத்துக்குமேல் மாணுக்கருக்குப் படிப்பூட்டும் நோக்கத்தோடு திறந்திருக்கப்படாது. பாடசாலையின் வேலை ஆரம்பிக்க வேண்டியநேரம் முகாமைக்காரரின் அல்லது தலைமை உபாத்தியாயரின் அபிப்பிராயப்படி விடப்படலாம். ஆனால் எந்தப் பாடசாலையாவது காலமே 8 மணிக்கு முன்னதாயும் 10 மணிக்குப் பின்னதாயும் திறக்கலாகாது. பாடசாலை நேரசூசி வித்தியாதரிசியால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

14. எந்தப் பாடசாலையாவது பெரும்பாகத்துக்குரிய வித்தியாதரிசியின் அல்லது பிரிவுக்குரிய வித்தியாதரிசியின் உத்தரவின்படியொழிய ஒரு கிழமையில் 5 நாட்களுக்கு மேலும் அல்லது ஒரு வருடத்தில் 180 நாட்களுக்குக் குறைந்தும் பாடசாலை வேலைக்காகத் திறந்திருக்கப்படாது.

15. இங்கு அணைத்திருக்கும் A அட்டவணையில் விவரித்திருக்கும் பகுதிக்குள் மேலாதார கல்விக்காகத் தகுந்த ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

### A.—அட்டவணை.

முற்கூறிய உபவிதிகளிற் குறிக்கப்பட்ட பகுதியின் விவரம்:—

குருநாகல் நகர வித்தியாபரிபாலன சங்கத்துக்குச்சேர்ந்த எல்லைகள்.

### B.—அட்டவணை.

ஆங்கில பாடசாலைகள்.

கிறயிஸ்ற் சேர்ச் கலவன் பாடசாலை, கண்டி றோட்டு, குருநாகல்.

சந்தாஞ மாதாவின் ஆண்பாடசாலை, சந்தாஞ மாதாவின், வீதி, குருநாகல்.

மாலிய தேவபுத்த ஆங்கில உயர்தரப் பாடசாலை, கண்டி றோட்டு, குருநாகல்.

பரிசுத்த குடும்ப மடம், சந்தாஞ மாதாவின் வீதி, குருநாக்கல்.

சுவபாஷா பாடசாலைகள்.

சீ. எம். எஸ். கலவன் பாடசாலை, பறேஸ் பார்க், குருநாகல்.

புத்த கலவன் பாடசாலை, கண்டி றோட்டு, குருநாகல்.

சீ. எம். எஸ். தமிழ் கலவன் பாடசாலை, சோன்ஸ்ட்ரேஸ் வீதி, குருநாகல்.

கத்தோலிக்க அநாதசாலையும் பாடசாலையும், சந்தாஞ மாதாவின் வீதி, குருநாகல்.

---

E 331/27

### "1920 ம் ஆண்டின் 1 ம் இலக்க வித்தியாபரிபாலன கட்டளைச் சட்டம்".

1920 ம் ஆண்டின் 1 ம் இலக்க வித்தியாபரிபாலன கட்டளைச் சட்டத்தின் 25 ம் பிரிவின்படி சலாப நகரசங்க வித்தியா பரிபாலன சபையால் செய்யப்பட்டு வித்தியாசங்கத்தின் அங்கீகாரம்பெற்று மேற்சொல்லிய பிரிவின்படி அதிகார மந்திரசபையோடு கூடிய தேசாதிபதி யவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட உபவிதிகள்.

உத்தமனார் கட்டளைப்படி.

பீ. எச். பேர்டிலன்,
கலோனியல் சககிறுத்தார்.

கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1931 ம் ஆண்டு மேமீ 27 ந் உ.

### உபவிதிகள்.

1928 ம் ஆண்டு மார்ச்மீ 22 ந் தேதியைக் கொண்ட 7635 ம் இலக்க "கசெற்" பத்திரிகையில் 1928 ம் ஆண்டு மார்ச்மீ 3 ந் தேதியைக்கொண்ட உபவிதிகளின் 4 ம் உபவிதியின் இரண்டாம் புறனடைக்குப் பதிலாகப் பின்வருவது வைத்துக்கொள்ளப்படுகின்றது:—

"ஆயின் 10 வயசுக்கும் 14 வயசுக்குமிடையிலுள்ள ஒரு பிள்ளை, பெண்பிள்ளையாயின் ஒழுங்குச் சட்டத்தில் விதிக்கப்பட்ட நாலாம் வகுப்புப் பரீட்சையிலும், ஆண்பிள்ளையாயின் ஐந்தாம் வகுப்புப் பரீட்சையிலும் வாசினை, எழுத்து, கணிதம் என்பவற்றில் சித்திபெற்றதாக வித்தியாதரிசியிடம் ஒரு சாட்சிப்பத்திரம் பெற்ற நகரவித்தியாபரிபாலன சபைத்தலைவரின் திருப்திக்குப் பிரயோசனமான தொழில் செய்து வந்தால் அவள் அல்லது அவன் பாடசாலைக்குப் போகவேண்டு மென்று ஒரு போதும் கேட்கப்பட மாட்டாது."

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.